# யா/கோண்டாவில் றோ.க.த.க.
# பாடசாலை

## பரிசளிப்பு விழா 2017

## அதிபர் அறிக்கை

### மகுட வாசகம்

"ஒற்றுமையே உயர்வாகும்"

### நோக்கக் கூற்று

நற்பிரசைகளை உருவாக்கும் தேர்ச்சித் திறன்களை வளர்த்தல்

### பணிக்கூற்று

ஆரம்பக்கல்வியில் அடைய வேண்டிய தேர்ச்சிகளையும் பண்புத் தரங்களையும் விருத்தி செய்தல்.

தலைமை

திரு.க.நித்தியானந்தன்

பாடசாலை முதல்வர்

பிரதம விருந்தினர்

கௌரவ பொ.ஐங்கரநேசன்.

முன்னாள் விவசாய அமைச்சர்

மாகாண சபை உறுப்பினர்

வடக்கு மாகாணம்

சிறப்பு விருந்தினர்

திருமதி .தே .மைதிலி

உதவிக் கல்விப்பணிப்பாளர்

ஆரம்பக் கல்விப் பிரிவு

வலயக் கல்வி அலுவலகம்

யாழ்ப்பாணம்.

திரு.S.K.N. தவராசா J.P

ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# நிகழ்ச்சி நிரல்

ஆலய வழிபாடு

விருந்தினர்களை அழைத்து வரல்

மங்கல விளக்கேற்றல்

இறை வணக்கம்

வரவேற்பு நடனம்

வரவேற்புரை

ஆசியுரைகள்

அதிபர் அறிக்கை

சிறப்பு விருந்தினர்கள் உரை

பரிசில் வழங்கல்

பிரதம விருந்தினர் உரை

கலை நிகழ்ச்சிகள்

நன்றியுரை

பாடசாலைக் கீதம்

## யா/கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை

## பரிசளிப்பு விழா – 2017

## அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல பர்வத பத்தினி அம்பாளின் திருப்பாதம் பணிந்து இன்றைய பரிசளிப்பு விழா அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதகுருமார்களே! அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய பிரதம விருந்தினர் அவர்களே! சிறப்பு விருந்தினர்களே! சகோதரப் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே! எமது பாடசாலை ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! பரிசில்கள் பெற காத்திருக்கும் மாணவச் செல்வங்களே! அனைவருக்கும் என் அன்பு கனிந்த காலை நேர வணக்கங்கள்.

எமது பாடசாலையின் பரிசில் நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கௌரவ மாகாண சபை உறுப்பினர் கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்களே! தாங்கள் திருநெல்வேலி இ.த.க.பாடசாலையில் தற்போதைய பரமேஸ்வரா பாடசாலையில் ஆரம்பக் கல்வியை தரம் 5 வரை கற்று, பின் தரம் 6, 7 வகுப்பினை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பின் இடைநிலைக் கல்வியையும் உயர் தரத்தினையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் தாவரவியலில் இளம் விஞ்ஞானமாணிப் பட்டப் படிப்பையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலில் முது விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும் கற்றுள்ளீர்கள்.

அதன் பின் யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் தாவர பாகுபாட்டியலாளராக தமது சேவையை ஆரம்பித்தவர். சிறந்த விஞ்ஞான ஆசிரியராக தமது சேவையை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கியவர். யூனிவேர்சல் என்ற கல்வி நிறுவனத்தை தாபித்து மாணவ உலகிற்கு வழிகாட்டியவர். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளர். “நங்கூரம்” என்ற சஞ்சிகை மூலம் பல்லாயிரம்

வாசகர்களை ஆற்றுப்படுத்தியவர். மேலும் "இமை" என்ற நிறுவனத்தை தாபித்து வடக்கின் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர். இவர் பசுமை மீது கொண்ட பற்றும் சமூகத்தின் மீது கொண்ட அக்கறையுமே அரசியல் மூலம் சமூகத்திற்கு பணிசெய்ய தூண்டியது. மக்களிடம் இருந்த மகத்தான ஆதரவுடன் வெற்றி பெற்று விவசாய அமைச்சராகி ஆற்றிய சேவைகள் அளப்பரியன. இன்றும் இவரின் சேவைகள் தொடர்கின்றன. இவர் எமது கிராமிய பாடசாலை பரிசில் நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது மிகவும் பொருத்தமானதே.

எமது பாடசாலை பரிசில் நாளில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தே. மைதிலி அவர்களே! ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை உடுவில் மகளீர் கல்லூரியிலும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் B.A பட்டத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்புளோமா பட்டத்தினையும் பெற்று புங்குடுதீவு அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும் வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரியிலும் திருகோணமலையில் சிறிவாணி வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலும் சிறப்பாக ஆசிரியராகப் பணியாற்றினீர்கள்.

2011ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகராக பதவியுயர்வு பெற்றும் 2014ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பக் கல்விக்குரிய உதவிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றும் நீங்கள் ஆரம்பக் கல்வி கணித விஞ்ஞானப் போட்டியில் மாகாண மட்டத்தில் பரிசையும் பெற்றீர்கள். சிங்கள மொழித் தேர்ச்சி, கணனி அறிவு கொண்ட தாங்கள் அஞ்சா நெஞ்சர், ஒதுக்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்யும் செயல் வீரர். ஆரம்பக் கல்வித்துறையின் உயர்ச்சிக்காக அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கி எமது சிறார்களின் உயர்ச்சியே தாரக மந்திரம் எனக் கொண்டு செயற்படும் தாங்கள் ஆசிரியர் கல்வியில் முதுகலைமானிப் பட்டத்தினையும் பெற்றுள்ளீர்கள். தாங்கள் இன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வது எமக்கு உவகையைத் தருகின்றது. தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு S.K.N. தவராஜா அவர்களே! தாங்கள் எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் கோப்பாய் மகாவித்தியாலயம் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இடைநிலை உயர் கல்வியைப் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைமானி, பொது நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்புளோமா, சைவ சித்தாந்தத்தில் முதுகலைமானிப் பட்டத்தினையும் பெற்ற தாங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உதவிப் பதிவாளராகக் கடமையாற்றி இவ்வாண்டு ஓய்வு பெற்றுள்ளீர்கள்.

தாங்கள் 1983ஆம் ஆண்டில் இருந்து ஆலயங்களில் சமய சொற்பொழிவாளராக, இசைச் சொற்பொழிவாளராக, வில்லுப்பாட்டுக் கலைஞராக சேவையாற்றும் தாங்கள் சமூக சேவையில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய செயலாளர், ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தான செயலாளர், பொருளாளர், மாவட்டக் கலாசாரப் பேரவை உறுப்பினர், இந்து சமயப் பேரவை உறுப்பினர், எமது பழைய மாணவர் சங்க செயலாளர் என்று சமூக சேவையாற்றும் தாங்கள் மால்நேயச் செல்வன், செஞ்சொல்லரசு, சோதிடக் கலாநிதி, கீதோபதேச வித்தகர், திருநாவலன், திருவாய் மொழியரசு, சொல்லிசை வாரி, பிரசங்க கலாவித்தகர், சாம ஸ்ரீ தேசமானிய, சைவநெறிச் சன்மார்க்கர், தேசோதயதீபம், கலைமாமணி, சைவசின்மயர், அருள்நிதி, கலைஞானச் சுடர், அகில இலங்கை சமாதான நீதவான் என்னும் பட்டங்களையும் பெற்றுள்ளீர்கள். சோதிடத்திலும் சிறந்து விளங்கும் தாங்கள் எங்கள் பாடசாலையின் அபிவிருத்திப் பணியில் நிரந்தர அதிபர் இல்லாவேளையிலும் பொறுப்புடன் பணியாற்றினீர்கள். தாங்கள் இன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வது எமக்குச் சிறப்பைத் தருகின்றது. தங்களை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

## அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை

எமது பாடசாலை அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் "D" பிரிவின் கீழ் உள்வாங்கப்பட்டு பாடசாலையின் பிரதான மண்டப கூரை முழுவதும் இறக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் வடக்குப் பகுதி எட்டு இடைவெளிகள் இரும்புக் கம்பி நெற்றினால் அடைக்கப்பட்டுள்ளது. ஒரு வகுப்பறை நிலம் புனரமைக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற ஆரம்பக்

கல்வி மாணவர்கள் அருகில் உள்ள பாடசாலையில் கல்வி கற்பதற்காகவாகும்.

## ஆசிரியர்கள்

தற்போதைய ஆசிரியர்களின் எண்ணிக்கை 5 ஆகும். சகல வகுப்புக்களுக்கும் ஆசிரியர்கள் உள்ளனர். அனைவரும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாவர். ஆனால் ஆரம்பக் கல்வி ஆங்கிலம், விசேட கல்வி ஆகியவற்றுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது. தற்போது ஆங்கிலம் பழைய மாணவர் திரு.கனகலிங்கம் சிறிதரன் (சுவிஸ்) அவர்களின் தனிப்பட்ட நிதி வழங்கலின் கீழ் ஆசிரியர் செல்வி.மு.பிருந்தா அவர்கள் ஆங்கிலம் கற்பிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் தரம் 1 வகுப்பாசியரியர் திருமதி ஜெ.பாலசுப்பிரமணியம் அவர்களின் நிதி வழங்கலின் கீழ் செல்வி. க.முருசானந்தி ஆசிரியர் மேலதிகமாகக் கல்வி வழங்கலில் துணையாக உள்ளார்.

## கல்வி அபிவிருத்தி

அனைவருக்கும் தரமான ஆரம்பக் கல்வி என்ற செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் எமது பிரதேசத்தில் கட்டாயக் கல்விக்குரிய வயதையுடைய பலர் பாடசாலைக்கு வருவதில்லை. இதனால் கல்வி நிலை பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளது.

எமது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுக்கு தடையான காரணியாக கற்றலுக்கான சூழல் வீட்டில் காணப்படாமை, வறுமை, போதிய வழிகாட்டல் இன்மை, சகோதரர் கற்றலில் ஆர்வம் காட்டாமை, பெற்றோர் பிள்ளைகளை முறையாக வழிப்படுத்தாமை என்பன காணப்படுகின்றன.

எமது பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கட்டாய வரவுக்குழு ஒழுங்கீனமான மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று மாணவர்களை அழைத்து வருகின்றனர்.

கற்றல் கற்பித்தல் நேரத்திற்கு மேலதிகமாக பிற்பகலிலும் விடுமுறைக் காலங்களிலும் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. மேலும் சுவிஸ்ஸில் வதியும் பழைய மாணவர் ஒருவரினால்

ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரியர் மூலம் ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தரம் 5 மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## கல்விப் பெறுபேறுகள்

இப்பிரதேச மாணவர்கள் பலர் நகர்புற வசதியான பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர். இவர்களில் நகர்ப்புறம் செல்ல முடியாதவர்கள் மட்டும் குறைந்த எண்ணிக்கையில் எமது பாடசாலை வருகின்றனர். இதனால் ஆசிரியர்கள் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. 2016ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100 வீத சித்தியடைந்துள்ளனர். இதற்காக உழைத்த ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

## விளையாட்டு

பாடசாலையின் விளையாட்டுத்துறை வளர்ச்சியில் ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் அக்கறை செலுத்தி வருகின்றனர். வருடந்தோறும் விளையாட்டு விழா நடாத்தி மாணவர்கள் திறனாய்வு செய்யப்படுகின்றனர். இந்நிகழ்வின் போது அருகில் உள்ள முன்பள்ளி மாணவர்களும் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## இந்து மன்றம்

மாணவர்களிடையே இறை பக்தியையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் முகமாக இந்து மன்றம் செயற்பட்டு வருகினறது. நாயன்மார்களின் குருபூசைகள், நவராத்திரி விழா என்பன சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. பிரதி வெள்ளிக் கிழமை தோறும் விசேட பூசைகள், சிவ புராணம் ஓதுதல், ஆசிரியர்களின் நற்சிந்தனை என்பன நடைபெறுகின்றன. பூசை ஒழுங்குகள், பஞ்ச புராணம் ஓதுதல் என்னும் இந்நிகழ்வுகளை சிறுவர்களே ஒழுங்காகக் கடைப்பிடிக்கின்றார்கள். இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி ர. பகீரதன் அவர்கள் செயற்படுகினறார்.

## மாணவர் மன்றம்

மாணவர்களின் ஆற்றல்களை வெளிக் கொணரும் வகையில் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. அவர்களே தலமைதாங்கி நிகழ்ச்சிகளை நடாத்துகின்றனர். அத்துடன் இம்முறை ஆசிரியர் தின விழாவினை மாணவர்களே தலமை தாங்கி நடாத்தினார்கள். கலை நிகழ்வுகளையும் நடாத்தினார்கள். ஆசிரியர் தின நிகழ்வில் பாடசாலையின் அயலிலுள்ள மூன்று முன்பள்ளி ஆசிரியர்களும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி வ. பாலச்சந்திரன் செயற்படுகின்றார்.

## சுற்றுச் சூழல் சுகாதாரக் கழகம்

பாடசாலையின் சுற்றுப் புறங்களை தூய்மையாக வைத்திருத்தல். பொலித்தீன் பாவனையைத் தடுத்தல், டெங்குநோய் பற்றிய விழிப்புணர்வு. சுகாதாரக் கருத்துக்கள். ஊட்டச்சத்துக் குழிசைகளை வழங்கல், சத்துணவு மேற்பார்வை என்பவற்றைச் செய்து வருகின்றது. அத்துடன் சூழல் நேயத் தன்மையைப் பேணுவதில் அக்கறை செலுத்தி வருகின்றது. இதற்கு பொறுப்பாசிரியராக திருமதி.வி.சர்வானந்தா செயற்பட்டு வருகின்றார்.

## ஆலோசனையும் வழிகாட்டலும்

இப்பிரிவின் கீழ் பாடசாலைக்கு வருகை தராமல் இருக்கும் மாணவர்கள், பிந்தி வரும் மாணவர்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகின்றது. அத்துடன் மாணவர்களின் முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்படுகின்றது. மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. தேவையேற்படும் போது பெற்றோர்கள் அழைக்கப்பட்டு கலந்துரையாடப்படுகின்றது. சுழற்சி முறையில் மாணவர்களுக்கான ஆலோசனைகள் ஆசிரியர்களால் காலைப் பிராரத்தனையின் போது வழங்கப்படுகின்றது. இதன் பொறுப்பாசிரியராக திருமதி.ஜெ.பாலசுப்பிரமணியம் செயற்படுகின்றார்.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது இருந்தது. அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பாடசாலையின் அதிபரும் செயலாளராக திரு.S.K.N. தவராசா அவர்களும் பொருளாளராக திரு.E. வாசன் அவர்களும் இன்னும் பல நிர்வாக உறுப்பினர்களையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இவர்களின் உதவியுடன் பாடசாலையின் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது.

## உணவு வழங்கல்

உலக உணவுத் திட்டத்தின் கீழும் இலங்கை அரசினது உதவியின் கீழும் பெற்றோர்களின் உதவியுடனும் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது. சமூகத்தில் உள்ள பலரும் தங்கள் விசேட வைபவங்களின் போது மாணவர்களுக்கு உணவு வழங்குவது சிறப்பான ஒன்றாகும்.

### பெற்றோர்களே! பாதுகாவலர்களே!

தரமான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதிலும் நெறிப்படுத்து வதிலும் கவனம் செலுத்தினாலேயே உங்கள் பிள்ளைகள் தரமான பிரஜைகளாக உருவாக முடியும். இதற்காக நீங்கள்,

- அருகில் உள்ள பாடசாலையைத் தெரிவு செய்யுங்கள்.
- பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்புங்கள்.
- பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.
- சீருடை மற்றும் பாதணிகளில் கவனம் செலுத்துங்கள்.
- கடவுள் வழிபாட்டை ஊக்குவியுங்கள்.
- இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட உற்சாகம் வழங்குங்கள்.
- பாட முன்னேற்றச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துங்கள்.
- பிள்ளைகள் வீட்டில் இருந்து தாமாக கற்பதற்கான சூழலை ஏற்படுத்துங்கள்.

- ஆசிரியர்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களுடன் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் பற்றி கருத்துப் பரிமாறுங்கள்.
- பாடசாலையின் ஒழுங்கு விதிகளை பிள்ளைகள் மதித்து நடக்க வழிப்படுத்துங்கள்.
- பாடசாலை தொடர்பான குறைநிறைகளை அதிபருடன் கலந்துரையாடுங்கள்.

## பாடசாலையின் தேவைகள்

நீண்டகால வரலாற்றையுடைய எமது பாடசாலை தொடந்து இயங்க வேண்டும். மாணவர் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். பௌதீக வளம் அதிகரிக்கப்பட வேண்டும்.
இதற்காக

- ஆரம்பக் கல்விக்காக அருகில் உள்ள பாடசாலையில் உங்கள் பிள்ளைகளை இணையுங்கள்.
- நவீன வசதியான வகுப்பறைகள் உருவாக்கப்பட வேண்டும்.
- விளையாட்டு முற்றத்து உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட வேண்டும்.
- கட்டடங்களின் பழைய கம்பி நெற் அகற்றப்பட்டு புதிதாக பாதுகாப்பானதாக அமைக்கப்பட வேண்டும்.
- நவீன உபகரணங்களின் பாவனைக்கேற்ப உயர்தர மின்சுற்று அமைக்கப்பட வேண்டும்.
- கற்றலுக்கு வலுவூட்டும் நவீன கருவிகள் (மல்ரி மீடியா) கொள்வனவு செய்ய வேண்டும்.
- பாடசாலையின் வகுப்பறைக் கதவுகள், வகுப்பறை நிலங்கள், களஞ்சிய அறை, அதிபர் அறை என்பன திருத்தியமைக்கப்பட வேண்டும்.
- வழிபாட்டு மண்டபத்தில் வழிபாட்டு படங்கள் மூடி வைக்கக்கூடியதாக வழிபாட்டு அலுமாரி அமைக்கப்பட வேண்டும்.
- கூட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்ற வகையிலான பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்தல் வேண்டும்.

இத்தேவைகளை நிறைவேற்ற சமூக நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், நன்கொடையாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

# அபிவிருத்தி வேலைகள்

1. கல்வித்திணைக்களத்தின் நிதி உதவியின் கீழ் பாடசாலை பிரதான மண்டபத்தின் கூரை முழுவதும் இறக்கப்பட்டு மரங்கள், சிலாகைகள், ஓடுகள் மாற்றப்பட்டு புனரமைக்கப்பட்டது. வகுப்பறை ஒன்று நிலம் முழுவதும் புனரமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் வடக்குப் பக்க 8 இடைவெளிகளுக்கும் கம்பி யன்னல் இடப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.
2. பழைய மாணவனும் பெற்றோருமான திரு.கு.நேசகுமார் அவர்களால் பாடசாலைக்கென ஆசிரியர் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புக் கொட்டகை 15அடி நீளம், 10அடி அகலம் 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
3. பாடசாலையில் மாணவர் ஆசிரியர் இணைய வசதியை ஏற்படுத்தும் "டொங்கிள்" 2500 ரூபா பெறுமதியானது திரு.ந.நல்லசிங்கம் அன்பளிப்புச் செய்துள்ளார்.
4. எமது மாணவன் செல்வன் நே. பர்வதனின் பிறந்த நாளையொட்டி வகுப்பறைகளில் காட்சிப்படுத்த 5000 ரூபா பெறுமதியான எட்டு பெனர்களை அவரது பெற்றோர்கள் கொள்வனவு செய்து தந்துள்ளார்கள்.
5. பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக இருந்த போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு செய்ய வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் கௌரவ சீ.வீ.கே. சிவஞானம் அவர்கள் 40,000 ரூபா ஒதுக்கித் தந்துள்ளார். இதற்கு திரு.ந.சிவலோகநாதன் ஐயா அவர்கள் வழிப்படுத்தி உதவினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
6. பாடசாலையின் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்த மடிக்கணனி கொள்வனவு செய்வதற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ பா. கஜதீபன் அவர்கள் விளையாட்டு விழாவில் வழங்கிய உறுதி மொழிக்கமைய 60,000 ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்.
7. சுவிஸ் நாட்டில் வதியும் பாடசாலையின் பழைய மாணவன் திரு.க.சிறிதரன் அவர்கள் மாதாந்தம் சம்பளம் தானே நேரடியாக வழங்கி எமக்கு ஒரு ஆங்கில ஆசிரியரை ஒழுங்கமைத்துத் தந்துள்ளார்.

இவர்களுக்கு எமது நன்றிகள்.

# நன்றியும் நிறைவும்

எமது பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்து பரிசில்களை வழங்கி வைத்த கௌரவ மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் அவர்களுக்கு எமது முதற்கண் நன்றிகள்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.தே.மைதிலி அவர்களுக்கும் திரு.S.K.N. தவராசா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இங்கு வருகை தந்த அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

பாடசாலைச் செயற்பாட்டில் பக்கபலமாக இருக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற அனுசரணை வழங்கிய கீழ் வருவோருக்கும் எமது நன்றிகள்.

1. முத்தொளி வீடியோ, பலாலி வீதி, கோண்டாவில்.
2. செல்வா எலக்ரிக்கல்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி.
3. விஜே சில்க், யாழ்ப்பாணம்
4. மயில் போட்டோ, வீடியோ அன்ட் பியூட்டிசியன்ஸ், கோண்டாவில் மற்றும் திருநெல்வேலி.

## திருக்குறள் மனனப்போட்டி – 2017

தரம் 1

1ஆம் இடம் செல்வி. றா. திர்சா

2ஆம் இடம் செல்வி. ச. டிவ்வோனி

3ஆம் இடம் செல்வி. ம. யதுசிக்கா

தரம் 2

1ஆம் இடம் செல்வி. த. ரமீனா

2ஆம் இடம் செல்வி. ர. சாயித்திரா

3ஆம் இடம் செல்வி. ரா. ஹெசியா நற்ரலி

தரம் 3

1ஆம் இடம் செல்வி. ர. மெலீனா

2ஆம் இடம் செல்வி. பி. சாருஜா

3ஆம் இடம் செல்வன். ர. சாயீஸ்வரன்

தரம் 4

1ஆம் இடம் செல்வன். ச. நெடுமாறன்

1ஆம் இடம் செல்வி. த. ஜோதிகா

2ஆம் இடம் செல்வன். நே. பர்வதன்

தரம் 5

1ஆம் இடம் செல்வி. வ. கோபிதா

2ஆம் இடம் செல்வி. ந. நபியா

# உறுப்பெழுத்துப் போட்டி -- 2017

தரம் 1

1ஆம் இடம் செல்வி. றா. திர்சா

2ஆம் இடம் செல்வி. ம. யதுசிக்கா

3ஆம் இடம் செல்வி. ச. டிவ்வோனி

தரம் 2

1ஆம் இடம் செல்வி. த. ரமீனா

2ஆம் இடம் செல்வி. ரா. ஹெசியா நற்ரலி

3ஆம் இடம் செல்வி. ர. சாயித்திரா

தரம் 3

1ஆம் இடம் செல்வன். கி. பபிசேக்

2ஆம் இடம் செல்வன். ர. சாயீஸ்வரன்

3ஆம் இடம் செல்வி .க. நிவேதிகா

தரம் 4

1ஆம் இடம் செல்வன் .ச. நெடுமாறன்

2ஆம் இடம் செல்வன். சி. அரிஸ்

2ஆம் இடம் செல்வன். அ. டெப்னி

தரம் 5

1ஆம் இடம் செல்வி. ந. நபியா

2ஆம் இடம் செல்வி. வ. கோபிதா

## நவராத்திரிப் போட்டிகள் - 2017

தரம் - 1

செல்வி.றா.திர்சா – கோலப்போட்டி 1ஆம் இடம்,
பூமாலை கட்டுதல் 1ஆம் இடம்.

செல்வி ச. டிவ்வோனி - கோலப் போட்டி 2ஆம் இடம்,
சகலகலாவல்லி மாலை ஓதுதல் 1ஆம் இடம்.
பூமாலை கட்டுதல் 3ஆம் இடம்.

செல்வி.ம. யதுசிக்கா – கோலப் போட்டி 3ஆம் இடம்,
சகலகலாவல்லி மாலை ஓதுதல் 2ஆம் இடம்.
பூமாலை கட்டுதல் 2ஆம் இடம்.

தரம் - 2

செல்வி றா. ஹெசிஜா நற்றலி – கோலப்போட்டி 1ஆம் இடம்,
மாலைகட்டுதல் 3ஆம் இடம்

செல்வி.த. ரமீனா – கோலப்போட்டி 2ஆம் இடம்,
சகலகலாவல்லிமாலை 1ஆம் இடம்.

செல்வி.ர. சாயித்திரா –கோலப்போட்டி 3ஆம் இடம்,
சகலகலாவல்லிமாலை ஓதுதல் 2ஆம் இடம்.

செல்வன் ப. ஹரீஸ்மன் - சகலகலாவல்லிமாலை 3ஆம் இடம்,
மாலை கட்டுதல் 1ஆம் இடம்,

தரம் - 3

செல்வன் ர. சாயீஸ்வரன் - கோலப்போட்டி 1ஆம் இடம்,
தோரணம் பின்னுதல் 2ஆம் இடம்,
சகலகலாவல்லி மாலை ஓதுதல் 1ஆம் இடம்.

செல்வன் கி. பபிசேக் - கோலப் போட்டி 3ஆம் இடம்,

செல்வன் உ. சுபாங்கன் - தோரணம்பின்னுதல் 1ஆம் இடம்,
சகலகலாவல்லிமாலை ஓதுதல் 3ஆம் இடம்.

செல்வி.பி. சாருஜா – தோரணம் பின்னுதல் 3ஆம் இடம்,
சகலகலாவல்லி மாலை 2ஆம் இடம்,

செல்வி ர. மெலீனா – கோலம் போடுதல் 2ஆம் இடம்.

தரம் - 4

செல்வன் நே. பர்வதன் கோலம் போடுதல் 1ஆம் இடம்,
மாலை கட்டுதல் 1ஆம் இடம்,

தோரணம் பின்னுதல் 1ஆம் இடம்,
சகலகலாவல்லி மாலை ஓதுதல் 1ஆம் இடம்.

செல்வன் ச. நெடுமாறன் - மாலை கட்டுதல் 2ஆம் இடம்.

செல்வன் சி. அரிஸ் - கோலம் போடுதல் 3ஆம் இடம்,

செல்வி.த. ஜோதிகா – கோலம் போடுதல் 2ஆம் இடம்,
தோரணம் பின்னுதல் 2ஆம் இடம்,
சகலகலாவல்லி மாலை ஓதுதல் 2ஆம் இடம்.

செல்வி. அ. டெப்னி – சகலகலாவல்லிமாலை ஓதுதல் -

3ஆம் இடம்,

தரம் - 5

செல்வி வ. கோபிதா – கோலம் போடுதல் 1ஆம் இடம்,
மாலை கட்டுதல் 1ஆம் இடம்,

# யா/கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை

## பாட ரீதியான பரிசில்கள் பெறுவோர் - 2017

தரம் - 1

செல்வன்.யா. லக்ஸ்சன் - சைவநெறி – 2ஆம் இடம், தமிழ் - 1ஆம் இடம், கணிதம் - 3ம் இடம், சுற்றாடல் 1ஆம் இடம், அழகியல் 3ஆம் இடம்.

செல்வி.றா. திர்சா – கிறிஸ்தவம் 1ஆம் இடம், தமிழ் 1ஆம் இடம்,கணிதம் 3ஆம் இடம், அழகியல் 2ஆம் இடம்.

செல்வி.ம. யதுசிக்கா – கணிதம் -1ஆம் இடம், சுற்றாடல் 3ம் இடம், சைவநெறி 3ஆம் இடம்.

செல்வி.ச. டிவ்வோனி – சைவநெறி 1ஆம் இடம், தமிழ் 3ஆம் இடம், கணிதம் 2ம் இடம், சுற்றாடல் 2ஆம் இடம், அழகியல் 1ம் இடம்.

தரம் - 2

செல்வன்.ப. ஹரீஸ்மன் - சைவநெறி -3ம் இடம்.

செல்வி. ர. சாயித்திரா – சைவநெறி 2ஆம் இடம், தமிழ் 3ஆம் இடம், கணிதம் 3ஆம் இடம், சுற்றாடல் 3ஆம் இடம், ஆங்கிலம் 3ஆம் இடம்.

செல்வி. த. ரமீனா – சைவநெறி 1ஆம் இடம், தமிழ் 2ஆம் இடம், கணிதம்1ஆம் இடம், சுற்றாடல் 2ஆம் இடம், ஆங்கிலம் 1ஆம் இடம்.

செல்வி. ரா. ஹெசிஜா நற்ரலி – கிறிஸ்தவம் 1ஆம் இடம், தமிழ் 1ஆம் இடம் , கணிதம் 2ஆம் இடம், சுற்றாடல் 1ஆம் இடம், ஆங்கிலம் 1ஆம் இடம்.

தரம் - 3

செல்வன். கி. பபிசேக் - சைவநெறி – 3ஆம் இடம்.

செல்வன். ர. சாயீஸ்வரன்- சைவநெறி 1ஆம் இடம், தமிழ் 1ஆம் இடம், கணிதம் 1ஆம் இடம், சுற்றாடல் 1ம் இடம், ஆங்கிலம் 1ஆம் இடம்.

செல்வி. க. நிவேதிகா – தமிழ் 3ஆம் இடம், கணிதம்2ஆம் இடம், சுற்றாடல் 2ஆம் இடம், ஆங்கிலம் 2ஆம் இடம்.

செல்வி.பி. சாருஜா – சைவநெறி 2ஆம் இடம், தமிழ் 2ஆம் இடம், கணிதம் 2ஆம் இடம், சுற்றாடல் 3ஆம் இடம், ஆங்கிலம் 3ஆம் இடம்

செல்வி.ர. மெலீனா – கிறிஸ்தவம் 1ஆம் இடம்.

தரம் - 4

செல்வன். ச. நெடுமாறன் - சைவநெறி 1ம் இடம், தமிழ் 1ஆம் இடம். கணிதம் 1ஆம் இடம், சுற்றாடல் 1ஆம் இடம், ஆங்கிலம் 1ஆம் இடம்.

செல்வன் நே. பர்வதன் - சைவநெறி 2ம் இடம், தமிழ் 2ஆம் இடம், கணிதம் 2ஆம் இடம், சுற்றாடல் 2ஆம் இடம், ஆங்கிலம் 3ஆம் இடம்.

செல்வி. அ. டெப்னி – கிறிஸ்தவம் 1ம் இடம், தமிழ் 3ஆம் இடம், கணிதம் 3ஆம் இடம், சுற்றாடல் 3ஆம் இடம், ஆங்கிலம் 1ஆம் இடம்.

செல்வி .த. ஜோதிகா - சைவநெறி 3ம் இடம், சுற்றாடல் 3ஆம் இடம்,

தரம் - 5

செல்வி. ந. நபியா - சைவநெறி 1ம் இடம், தமிழ் 1ஆம் இடம், கணிதம் 2ஆம் இடம், சுற்றாடல் 1ஆம் இடம், ஆங்கிலம் 1ஆம் இடம்.

செல்வி. வ. கோபிதா - சைவநெறி 2ம் இடம், தமிழ் 1ஆம் இடம், கணிதம் 1ஆம் இடம், சுற்றாடல் 2ஆம் இடம், ஆங்கிலம் 2ஆம் இடம்.

## ஆசிரியர் விபரம்

| பெயர் | வகுப்பு | தரம் | தகமை |
|---|---|---|---|
| திரு.க.நித்தியானந்தன் | அதிபர் | SLPS III | PGDE, MED. |
| திருமதி.ஜெ.பாலசுப்பிரமணியம் | தரம்-1 | SLTS I | Trd. Primary |
| திருமதி.வி.சர்வானந்தா | தரம்-2 | SLTS I | Trd. Primary |
| திருமதி.க.கமலேந்திரன் | தரம்-3 | SLTS I | Trd. Tamil |
| திரமதி.ர.பகீரதன் | தரம்-4 | SLTS I | Trd. Primary |
| திருமதி.வி.பாலச்சந்திரன் | தரம்-5 | SLTS I | Trd. Primary |

## முகாமைத்துவக் குழு

1. திரு.க. நித்தியானந்தன்
2. திருமதி.ர.பகீரதன்
3. திருமதி.ஜெ.பாலசுப்பிரமணியம்
4. திருமதி.வி.சர்வானந்தா
5. திருமதி.க.கமலேந்திரன்
6. திருமதி.வி.பாலச்சந்திரன்

## ஒழுக்காற்றுக் குழு

1. திரு.க. நித்தியானந்தன்
2. திருமதி.ர.பகீரதன்
3. திருமதி.வி.பாலச்சந்திரன்

## வழிகாட்டல் ஆலோசனை

1. திரு.க.நித்தியானந்தன்
2. திருமதி.ஜெ.பாலசுப்பிரமணியம்

## கட்டாய வரவுக்குழு

1. திரு.க. நித்தியானந்தன்
2. திருமதி.ர.பகீரதன்
3. திருமதி.ஜெ.பாலசுப்பிரமணியம்

## மன்றங்கள்

### இந்து மன்றம்

பொறுப்பாசிரியர்:- திருமதி.ர.பகீரதன்

தலைவர் - செல்வன்.நே.பர்வதன்
செயலாளர்:- செல்வி.ந.நபியா
பொருளாளர்:- செல்வி.கு.பிரிந்தினி
உறுப்பினர்கள்:-

1. செல்வன்.உ.சுபாங்கன்
2. செல்வி.த.ரமீலா
3. செல்வன்.ய.லக்ஸன்

## மாணவர் மன்றம்

பொறுப்பாசிரியர்:- திருமதி.வி.பாலச்சந்திரன்
தலைவர்:- செல்வி.வ.கோபிதா
செயலாளர்:- செல்வன்.ச.நெடுமாறன்.
பொருளாளர்:-செல்வி.த.ஜோதிகா
உறுப்பினர்கள்:-
செல்வி.ர.சாயித்திரா
செல்வி.பி.சாருஜா
செல்வி.றா.திர்சா

## சுகாதார சுற்றுச் சூழல் கழகம்

பொறுப்பாசிரியர்:- திருமதி.வி.சர்வானந்தா
தலைவர்:- செல்வி.த.ஜோதிகா
செயலாளர்:- செல்வி.அ.டெப்னி
பொருளாளர் செல்வன் கி.பபிசேக்
உறுப்பினர்கள்:-

1. செல்வன்.ப.ஹரிஸ்மன்
2. செல்வி.றா.திர்சா

## பழைய மாணவர் சங்கம்

தலைவர்:- திரு.க.நித்தியானந்தன் (அதிபர்)
செயலாளர்:- திரு.S.K.N.தவராசா
பொருளாளர்:- திரு.E.வாசன்
உப செயலாளர்:- திருமதி.ப.பஞ்சலிங்கம்
பத்திராதிபர்:- திருமதி.ம.சந்திரகுமார்
உறுப்பினர்கள்:-

1. திரு.ந.சிவலோகநாதன்
2. திரு.அ.அருளம்பலம்
3. திருமதி.க.நேசகுமார்
4. திரு.வீ.கனகசிங்கம்
5. திருமதி.ரஜனிகா கிருஸ்ணகுமார்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர்:-திரு.க.நித்தியானந்தன் (அதிபர்)
செயலாளர்:- திருமதி.க.நேசகுமார்
பொருளாளர்:- திருமதி.ர.பகீரதன் (ஆசிரியர்)
உறுப்பினர்கள்:-

1. பாடசாலை சுற்றாடல் பாதுகாப்பு.
   திரு.கு.நேசகுமார்
   திரு.சி.தனராஜ்
2. உணவு வழங்கல் அனுசரணை
   திருமதி.க.நேசகுமார்
   திருமதி.நி.தஜித்
3. மாணவர் வரவு
   திருமதி.நி.தஜித்
   திருமதி.ம.காஞ்சனா
4. பௌதீக வளப் பாதுகாப்பு
   திரு.க.சந்திரகுமார்
   திரு.பு.பகுதீபன்
5. மாணவர் ஒழுக்கம் விழுமியம் பேணல்
   திருமதி.நா.காஞ்சனாதேவி
   திருமதி.ர.சுபிதா
6. மாணவர் கல்வி அபிவிருத்தி
   திரு.அ.ரவீந்திரகுமார்
   திருமதி.ம.தர்மவதி
7. வலயப் பிரதிநிதி
   திருமதி.க.சோதிதாசன் (ISA)

## எமது பாடசாலைக்கான உதவிகள்

1. திரு.கு.நேசகுமார் மகன் பிறந்த நாள் "பனர்" அன்பளிப்பு – 5000.00
2. திரு.ந.சிவலோகநாதன் தரம் 1 கால்கோள் விழா அப்பியாசக் கொப்பிகள் - 1000.00
3. திரு.ந.நல்லசிங்கம் கணனி இணைய இணைப்புக்கருவி (டொங்கிள்) 2500.00
4. பாடசாலை விளையாட்டு விழா பழைய மாணவர்கள் - 16,000.00
5. திரு.கு.நேசகுமார் பாடசாலை விளையாட்டு விழா – 20.000.00
6. திரு.கு.நேசகுமார் பாடசாலை விளையாட்டு விழா ஒலிபெருக்கி வாடகை அன்பளிப்பு – 6000.00
7. திரு.கு.நேசகுமார் பாடசாலை விளையாட்டு விழா மைதானம் துப்பரவு – 5000.00
8. திரு.க.சந்திரகுமார் பாடசாலைக்கான மின் மணி 1500.00
9. திரு.கு.நேசகுமார் பாடசாலைக்கான ஆசிரியர் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புக் கொட்டகை அமைப்பு 50.000.00
10. கௌரவ C.V.K.சிவஞானம் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கானது. - 40.000.00
11. கௌரவ பா.கஜதீபன் வட மாகாணசபை உறுப்பினர் மடிக் கணனி கொள்வனவு செய்வதற்கானது. 60.000.00

தங்கள் வரவு நல்வரவாகுக.



# யா/கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை

## பாடசாலைக் கீதம்

யாழ் நகர்த் தீபமாம் கோண்டாவில் மிளிர்
றோமன் கத்தோலிக்கப் பாடசாலை வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க - யாழ்

கலை மிகு எழிலும் கவி மலி அழகும்
காத்திடும் எங்கள் கூடம்
மாணவ மணிகள் மகிழ்ந்து குலாவும்
மாண்பின் எழில் திகழ் கூடம் - யாழ்

சித்திர வனப்பும் சிறந்த நற்கீதமும்
செயற்றிறன் காட்டிடவே
செந்தமிழ் மொழியும் சிறந்த நல்லாக்கமும்
சீர்பெற்று ஓங்கிடவே - யாழ்

ஆரம்ப பாடசாலை ஆயினும் துவே
பல்கலைக் கழகத்தின் இதயம்
அகில இலங்கையிலும் போட்டியில் சளைக்கா
வெற்றிகள் ஈட்டிடுவோம் - யாழ்